දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )
My No. )FV/SA/SV/C/02/2011(III)

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date )2016.12.08

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம் : 01 - 69 / 2016

மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும்
சுகாதார தாபானத்தலைவர்கள் அனைவருக்கும்,

<u>வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு – 2016</u>

நிதிப் பிரமாணம் 756 மற்றும் 770 பிரகாரம் அரச நிதி சுற்றறிக்கை 2016... இன் அறிவுறுத்தல்களுக்கமைய சகல அரச தாபனங்களுக்கும் 2016 ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

02. அவ்வரச நிதி சுற்றறிக்கை 2016 இன் ஊடாக பிராந்திய அலுவலகங்களுடன் திணைக்களத்திற்கு முன்பிருந்த காலத்திற்கு விடவும் கூடுதலான காலமொன்று கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்காக வழங்கப்பட்டதை அறியத்தருவதுடன், அக்காலத்தினுள் பொதுவான பொருட்கள், வாகனங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் என்பவற்றுக்கு தனித்தனியாக கணக்கெடுப்புகள் மேற் கொண்டு உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்து அறிக்கையிட வேண்டும் என்பதை அவதானத்திற்குட்படுத்துகின்றேன். உரிய கால அட்டவணை கீழுள்ளவாறு ஆகும்.

I. 2016.12.15ம் திகதிக்கு முன்னர் ஆய்வு சபை அங்கத்தவர்கள் நியமித்து அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

II. 2017.03.15ம் திகதிக்கு முன்னர் 2016 ஆண்டிற்கான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் பௌதீக ஆய்வுகள் மேற்கொள்ளல் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

III. 2017.02.31ம் திகதிக்கு முன்னர் 2016 பொருள் கணக்கெடுப்பு ஆய்வு சபையினூடு பெற்றுக் கொள்ளல்.

IV. 2017.04.15ம் திகதிக்கு 2016 ஆய்வின் தெளிவாகியுள்ள குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பில் அறிக்கையிடுதல் மற்றும் நடவடிக்கை எடுத்தல்.

V. 2017.04.30ம் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கையின் பிரகாரம் பொருத்தமான வகையில் அழித்தல் நடவடிக்கை மேற்கொள்ளல்.

VI. 2017.06.15ம் திகதிக்கு முன்னர் 2016ம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு அறிக்கை பிரதான கணக்கெடுப்பு அலுவலருக்கு பிரதியிட்டு, கணக்காய்வாளருக்கு அனுப்ப வேண்டும். (கணக்காய்வாளரின் பிரதி இவ்வமைச்சின் அரச கணக்காய்வு பிரிவிற்கு அனுப்ப வேண்டும். என்பதுடன், அவ்வறிக்கை அனுப்பப்படுகின்ற குறிப்பு கடிதத்தின் பிரதியொன்றை எனக்கும் அனுப்பப்படல் வேண்டும்).

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශහිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385. Rev. Baddegama Wimalawansa Thero Mawatha. Colombo 10. Sri Lanka.

03. 2016 ஆண்டிற்குள் பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுமதி விபரங்கள் அரச நிதி சுற்றறிக்கை 422 இன் இணைப்பிற்கு அமைய உரிய விபரங்கள் நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்காக 2017.04.30ம் திகதிக்கு முன்னர் கணக்காளர் - நிதி திட்டமிடல் இற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. நிதி நிர்வாகம் தொடர்பாக அதிகாரம் வழங்குவதற்கு அமைய ஆய்வு சபை மற்றும் அழித்தல் சபை நியமித்து அனுமதி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. குறித்த காலத்திற்குள் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளாதிருத்தல் மற்றும் கணக்காய்வாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்காமை கணக்காய்விற்கு உட்பட்டதாகும். மேற்படி அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத அலுவலர்கள் கணக்காய்வு விசாரணைகளுக்கு அரச நிதி உப குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூறல் வேண்டும்.

06. நீங்கள் கணக்காய்வறிக்கை அனுப்பும் போது பொது பொருட்கள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரிவுகளின் பட்டியலும் ஆய்வறிக்கையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவையின் பிரதான கணக்காளர் (பொருட்கள் கணக்கெடுப்பு) இனூடு பெற்றுக் கொள்ளலாம். உரிய தொலைபேசி இலக்கம் 011-2667903 ஆகும்.

அனுர ஜயவிக்கிரம
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.